[Sri C. Subramaniam] [21st December 1954

it does not mean that we are not giving any consideration to those suggestions. As far as the working of this Bill is concerned, I have absolutely no doubt that this Government and also the authorities concerned will act in the best interests of the State and the public as a whole. We will try our best, as far as it lies in human power, to see that the power conferred under this Bill is not abused and is not used for the purpose of harassing anybody or used in a way which is likely to affect the growth and development of dramatic art. After all, the development of art is dear to everybody here, not only to the Opposition but to the Government side also. Therefore, I have no doubt that in the working of this legislation, all these misapprehensions and fears will be falsified and if not in this session, during the Budget Session, also there will not be any justifiable complaints to be made against the Government in regard to the administration of this legislation.''

MR. SPEAKER :—'' The question is—

'That the Madras Dramatic Performances Bill, 1954, as amended, be passed into law.' ''

The motion was put and carried and the Bill was passed into law.

MR. SPEAKER :—'' Let us take up the half-hour debate regarding sinking of wells in Coimbatore district.''

### III—HALF-HOUR DEBATE *RE* SINKING OF WELLS IN COIMBATORE DISTRICT.

MR. SPEAKER :—'' I shall give five minutes to the hon. Member Sri K. T. Raju, five minutes to the hon. Member Sri Nallasami, five minutes to the hon. Member Nallasivam, five minutes to the hon. Member Sri Manickam and ten minutes to the Hon. Minister.''

6–07 p.m, SRI K. T. RAJU :—'' கனம் சபாநாயகர் அவர்களே, இரண்டு தினங்களுக்கு முன்பு கனம் அங்கத்தினர் பீ. ஜி. மாணிக்கம் அவர்கள் கேட்ட கேள்விக்கு கனம் சுகாதார மந்திரி அவர்கள் கோயமுத்தூரில் குடி தண்ணீருக்காக வெட்டப்படவேண்டிய கிணறுகள் 119 என்றும், ஒரு கிணறுதான் வெட்டப்பட்டதென்றும், நான்கு கிணறுகள் ரிப்பேர் செய்யப்பட்டதென்றும் கூறினார். கோயமுத்தூர் மேட்டுப்பாங்கான பிரதேசமாதலால், குடித்தண்ணீருக்கு எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்று அந்த ஜில்லா வாசிகளுக்குத்தான் தெரியும். அந்த ஜில்லா கிராமங்களிலுள்ள ஹரிஜனங்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு குடிதண்ணீர் வசதி மிக மிகக் குறைவு. இந்த ஹரிஜனங்கள் ஜாதி ஹிந்துக்கள் இருக்கும் இடத்தில் தண்ணீர் எடுக்க முடியுமா ? அப்படி இருக்கும்போது அவர்களுக்கு எவ்வாறு தண்ணீர் கிடைக்கும். ஹரிஜனச்சேரியிலே கிணறு இல்லையென்றுச் சொன்னால் அவர்கள் வேறு எங்கிருந்து தண்ணீர் கொண்டுவருவார்கள். இந்த அரசாங்கம் ஹரிஜனங்களுக்கு செய்யவேண்டிய மற்ற காரியங்களைச் செய்யாவிட்டாலும், இந்தக் குடிதண்ணீர் வசதியையாகிலும் செய்துத் தரவேண்டாமா ?

"நண்பர் மாணிக்கம் அவர்கள் சொன்னார்கள் சேரிவாழ் ஹரிஜனங்களுக்கு குடிதண்ணீர் கிடைப்பது மிகவும் அறிதாக இருக்கிறது என்று. ஒரு கிணறு வெட்டவேண்டுமானால் மூன்று அல்லது நான்கு ஆயிரம்

21st December 1954] [Sri K. T. Raju]

ரூபாய் பிடிக்கிறது. அதற்கு அவ்வேழை ஹரிஜன மக்கள் எங்கு செல்வார்கள். அந்த இடத்தில் வெட்டப்பட்ட ஒரு கிணறிலிருந்து எவ்வளவு வீடுகளுக்கு தண்ணீர் எடுத்துக்கொள்ளமுடியும். கனம் மந்திரியார் கூறும் சமாதானம் சரியாக இல்லை. இந்த ஜில்லாவிலுள்ள அங்கத்தினர்கள் இது முக்கியமாக உடனடியாக தீர்க்கப்படவேண்டிய பிரச்னையென்று மனு கொடுத்திருந்தும்கூட, அதைப்பற்றி ஹரிஜன் வெல்பேர் டிபார்ட்மெண்டும் தங்களிடம் பண வசதியில்லையென்று சொல்லுகிறார்கள். கலெக்டருக்கு அதிகாரம் கொடுக்காதிருப்பதினாலும், ரெவின்யூ போர்டிலிருந்து தாமதம் ஏற்படுவதனாலும் உடனடியாகச் செய்து கொடுக்கமுடியவில்லையென்று சொல்லுகிறார்கள். ஏற்கனவே திட்டமிட்டபடி 119 கிணறுகள் இந்தப் பகுதிகளில் வெட்டியிருக்கவேண்டும். அப்படி இருந்தும்கூட ஒரு கிணறு தான் வெட்டியிருக்கிறார்கள், நான்கு கிணறுகள் ரிப்பேர் செய்திருக்கிறார்கள். ஆதலால் ஹரிஜனங்களின் முன்னேற்றம் கருதி அரசாங்கம் அவர்களுக்காக எவ்வளவு கிணறுகள் வெட்டவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டதோ அதற்காக எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டதோ அவ்வளவையும் செலவழித்து அவர்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்."

*Sri R. V. SWAMINATHAN :—" On a point of order, Sir, சபையில் கோரமில்லை."

Sri M. KALYANASUNDARAM :—" There is quorum, Sir."

(The quorum bell was rung and Members came in.)

*Sri P. G. MANICKAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, 1954-ம் வருஷம் டிசம்பர் மாதம் 16 தேதியில் என்னால் கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு கனம் சுகாதார மந்திரி அவர்கள் ஒரு பதில் கொடுத்திருக்கிறார். அதாவது சென்னை பட்ஜெட்டில் ரூரல் வாட்டர் சப்ளை ஸ்கீம் சம்பந்தமாக பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டிருக்கும் 40 லட்சம் ரூபாயிலே கோயம்பத்தூர் ஜில்லாவிற்கு லோகல் டெவலப்மெண்ட் சம்பந்தமாக ரூ. 2,85,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று பதில் சொன்னார். இவ்விதம் பணம் ஒதுக்கியும் அதாவது ரூபாய் இரண்டு லட்சத்தி எண்பத்தி ஐயாயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டதிலே ஹரிஜனங்களுக்கு ஒரு கிணறு வெட்டியும் நான்கு கிணறுகளை ரிப்பேர் செய்யப்பட்டதாகவும் தன்னுடைய பதிலில் குறிப்பிட்டிருக்கிறார். உண்மையிலேயே ஹரிஜனங்கள் அங்கு ஏதாவது கோயம்பத்தூர் ஜில்லாவில் எவ்வளவு கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பது கனம் மந்திரி அவர்கள் கொடுத்த பதிலிலிருந்தே நன்றாகத் தெரியவரும். அந்த ஜில்லாவில் 119 சேரிகளுக்கு புதுக் கிணறுகள் வெட்டப்படவேண்டும். 316 கிணறுகள் ரிப்பேர் செய்யப்படவேண்டும் என்று என்னுடைய கேள்விக்குப் பதில் சொல்லப்பட்டிருக்கிறது. போதுமான தொகை ஒதுக்கியிருந்தும் வெட்டப்பட்ட கிணறு ஒன்றுதான். ஜில்லா போர்டு மூலமாக கிணறுகளை மராமத்துச் செய்யப்படுவதற்குப் பணம் செலவு செய்கின்றார்கள். உண்மையில் புதிய கிணறுகள் வெட்டவேண்டுமென்றால் அதற்கு தனிப்பட்டு கவர்ன்மெண்ட் செலவழிக்க வேண்டும். ஆனால் இப்பொழுது 119 சேரிகளில் கிணறுகள் கிடையாது." 6-10 p.m.

Mr. SPEAKER:—" கோரம் இல்லாவிட்டால் அகோரமாகப் போய்விடும். ஆகையால் சீக்கிரம் முடித்துவிடுங்கள்."

*Sri P. G. MANICKAM:—" கவர்ன்மெண்டார் அதிகமாக தொகையை ஒதுக்கி இருக்கிறார்கள். ஹரிஜன டிபார்ட்மெண்ட்டிற்கும் அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது, வாட்டர் சப்ளை ஸ்கீம் திட்டத்தின் கீழ் அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது, கம்யூனிட்டி ப்ராஜெக்ட் மூலமாக அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவ்விதம் பல விதங்களில் அதிகப்படியான தொகை ஒதுக்கியிருந்தும் வேலை சரியானபடி ஏன் நடக்கவில்லை என்பதுதான் தெரியவில்லை. இந்த வருஷம் கூட ஐந்து லட்சம் ரூபாய் லோயர் பவானி

சமுதாய திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தும் இன்னும் ஏன் சரியானபடி கிணற்று வேலைகள் நடக்கவில்லை என்பதுதான் தெரியவில்லை. அதனால் சர்க்கார் உடனடியாக ஒரு திட்டத்தை வகுக்கவேண்டும். இப்பொழுது எட்டுக்கு எட்டு அடி என்று கிணறு வெட்டுவதற்கு ஒரு திட்டம் வகுத்திருக்கிறார்கள். அதற்காக நாலாயிரம் ஐயாயிரம் ரூபாயில் ஒரு எஸ்டிமேட்டும் தயாரித்திருக்கிறார்கள். கண்ட்ராக்டுக்கும் விடுகிறார்கள், ஆனால், வேலை மட்டும் சரியாக நடைபெறவில்லை. ஹரிஜன் டிபார்ட்மென்டிற்கு சுமார் இரண்டு லட்சம் ரூபாய் ஒதுக்கியும் இன்னும் வேலை முடியவில்லை. அதற்கு பல காரணங்களைச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். நாங்கள் இந்த சமயத்தில் என்ன சொல்லுகிறோம் என்றால் ஹரிஜனங்களுக்கு கிணறுகள் வெட்டுவதற்கு ஒரு கமிட்டியை அமைத்து அதுவும் ஒரு தாசில்தாருடைய தலைமையில் அந்தக் கமிட்டியை அமைத்து இந்த வேலையை துரிதமாக நடைபெறச் செய்யவேண்டும். இன்னும் அந்தக் கமிட்டியில் பல முக்கியஸ்தர்களையும் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆகவே வேலைகளை கண்ட்ராக்டர்களிடம் விடாமல் ஒரு கமிட்டி அமைத்து அந்தக் கமிட்டியின் தலைமையின் கீழ் அந்த வேலையை நடத்தினால் அந்த வேலை சீக்கிரமாகவும் முடியும், லாபகரமாகவும் இருக்கும் என்பதை சொல்லிக்கொண்டு இத்துடன் நான் முடித்துக் கொள்ளுகிறேன்."

6-15 p.m. ***Sri B. K. NALLASWAMI**:—" கனம் சபாநாயகர் அவர்களே, எங்கள் ஜில்லாவிலேயே ரொம்ப அதிகமாக ஹரிஜனங்கள் வசிக்கக்கூடிய தாலுக்கா பவானி தாலுக்காவாகும். அதிலேயுள்ள பல சேரிகள் தண்ணீர் வசதியின்றி இருக்கின்றன. குறிப்பாக இன்னும் நாற்பது, ஐம்பது சேரிகளில் கிணறுகள் வெட்டப்படாமல் இருக்கின்றன. நூறு குடும்பங்கள் உள்ள சேரிகளில்தான் கிணறு வெட்டப்படும் என்கின்ற அபிப்பிராயத்தில் ரெவின்யூ அதிகாரிகள் இருந்து வருகிறார்கள். ஆனால் பல சேரிகளில் இருபத்தைந்து குடும்பங்கள், ஐம்பது குடும்பங்கள் இருக்கின்றன. ஹரிஜனங்கள், எங்கங்கே புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றதோ அங்கெல்லாம் குடிசை கட்டிக்கொண்டு இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களெல்லாம் குடி தண்ணீர் வசதியின்றி ரொம்பவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். சில கிராமங்களிலே கிணறுகள் வெட்டப்பட்டிருந்தாலும் கூட அதிலே சில விசேஷ கஷ்டங்களிருக்கின்றன. குறிப்பாக சில உதாரணங்களைக் கொடுக்கிறேன். எங்கள் ஜில்லாவில் முரளி என்று ஒரு கிராமம் இருக்கிறது. அதிலே ஹரிஜனங்களுக்காக ஒரு நிலச்சுவான்தார் கிணறு வெட்டிக் கொடுத்திருக்கிறார். ஆனால் அந்தக் கிணத்திலே தண்ணீர் எடுப்பதற்குப் பதிலாக சேரியிலுள்ள குப்பை முழுவதையும் கொடுத்துவிடவேண்டுமென்ற நிபந்தனை விதிக்கிறார். ஆப்புக்குடல் என்று இன்னொரு கிராமம் இருக்கிறது. அதில் ஹரிஜனங்களுக்காக என்றே ஒரு கிணறு வெட்டப்பட்டிருக்கிறது. ஆனால் அது ஜாதி ஹிந்துக்கள் வசிக்கின்ற இடத்திற்கு அருகாமையில் இருப்பதால் அதில் ஹரிஜனங்களைத் தண்ணீர் எடுத்துக்கொள்ளக்கூடாது என்று தடுக்கிறார்கள். ஹரிஜனங்களுக்காக வெட்டப்படும் கிணறுகள் ஹரிஜன சேரிக்கு அருகாமையிலேயே தான் இருக்க வேண்டும். ரொம்ப தூரத்தில் இருக்கக்கூடாது என்பதை சர்க்கார் நன்கு உணர்ந்துகொள்ள வேண்டும். தொட்டிப்பாளையம் என்கின்ற ஊரில் ஒரு கிணறு இருக்கிறது. அங்கும் கூட ஒரு கூடை கல் பொறுக்கிக் கொண்டு வந்து போட்டால் தான் தண்ணீர் எடுத்துக்கொண்டு போக ஹரிஜனங்கள் அனுமதிக்கப்படுவார்கள். ஹரிஜனங்கள் படுகின்ற கஷ்டத்தைப் பார்த்து என்போன்ற பிரதிநிதிகள் பலமுறை எடுத்துச் சொல்லியும்கூட அவர்களுடைய கஷ்டம் இன்னும் நீக்கப்படாதது கண்டு ரொம்பவும் வருந்துகிறேன். அதற்கு முக்கியமான காரணம் அதிகாரிகளின் மனப்பான்மை இன்னும் சரியாகவில்லை. இதற்காக தனியான அதிகாரிகளைப் போட்டு, அதாவது விசேஷ தாசீல்தாரையோ அல்லது ஒரு சூப்ரவைசர்களையோ நியமித்து எந்தெந்த இடங்களில் ஹரிஜனங்கள் தண்ணீர் இன்றி மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்று பார்த்து அங்கெல்லாம் பல கிணறுகளை வெட்ட ஏற்பாடு செய்யவேண்டும். அப்பொழுதுதான் அவர்களுடைய கஷ்டங்களை துரிதமாக நீக்கமுடியும். ஆகவே கனம் மந்திரி அவர்கள் உடனடியாக

21st December 1954] [Sri B. K. Nallaswami]

ஸ்பெஷல் தாசீல்தாரையோ வேறு யாரையாவதோ போட்டு கோயமுத்தூர் ஜில்லாவில் குறிப்பாக பவானி தாலுக்காவில் ஹரிஜனங்களுக்கு வேண்டிய குடி தண்ணீர் கிணறுகளையெல்லாம் இந்த பட்ஜெட் வருஷத்திற்குள்ளேயே வெட்டித் தர ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இதற்காக ஒதுக்கப்படும் எல்லாப் பணத்தையும் அரசாங்கம் செலவழிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.''

***Sri K. R. NALLASIVAM** :—'' கனம் சபாநாயகர் அவர்களே, எங்கள் பிராந்தியத்திலே சமுதாய நல அபிவிருத்தி திட்டம், தேசீய விஸ்தரிப்புத் திட்டம் ஆகியவற்றின் கீழ் பல கிணறுகளை வெட்டுகிறார்கள். ஆனால் அவற்றிலிருந்து ஹரிஜனங்கள் தண்ணீர் எடுத்துக் கொள்ளவே முடியாது. பல கஷ்டங்கள் இருக்கின்றன. அக்கிணறுகளும் சேரிகளில் வெட்டப்படுவது கிடையாது. அதற்கு முக்கியமான காரணம் என்னவென்றால் எல்லாத் தேர்தல்களிலும் ஹரிஜனங்களின் வோட்டுக்களை மிரட்டியே வாங்கிவிட முடியும். ஆகவே வசதி செய்து கொடுத்து தீரவேண்டுமென்பதில்லை என்ற காரணத்தினால்தான்.

'' பல கிராமங்களிலே இவர்கள் இன்னமும் அடிமைகளாகவே இருக்கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான கிணறு வசதியும் கிடையாது. அதோடு மாத்திரம் அல்ல. அங்கே ஜாதி ஹிந்துக்களும் சேர்ந்து வாழ்கிறார்கள். அங்கு இருக்கக்கூடிய மேல் ஜாதிக்காரர்கள் சமுதாய நல அபிவிருத்தித் திட்டத்தின் கீழும், ஜில்லா போர்டு மூலமாகவும் வெட்டப்படுகின்ற கிணறுகளில் ஹரிஜனங்களையே தண்ணீர் எடுக்க விடுவது கிடையாது. அவர்கள் தண்ணீர் எடுக்கவேண்டுமென்று கேட்டால் அவர்கள் வேலையே போய்விடும். இந்த மாதிரியான நிலைமைதான் நூற்றுக்கு 90 கிராமங்களில் இருந்துகொண்டிருக்கிறது. அக்கட்சியிலிருந்து ஸ்ரீ மாணிக்கம் சொன்னது போல ஒரு கமிட்டியை ஏற்படுத்தி அக்கமிட்டி கிணறுகள் இல்லாத மொத்தமுள்ள கிராமங்கள் எத்தனை என்று கணக்கெடுத்து அங்கெல்லாம் கிணறுகளை வெட்டிக் கொடுக்கக்கூடிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியது ரொம்பவும் அவசியமாகும் என்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.''

**Sri A. RATNAM** :—'' கனம் சபாநாயகர் அவர்களே, கோயமுத்தூர் 6–20 p.m.
ஜில்லாவில், பல கிராமங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் குடிதண்ணீர் வசதியின்றி தவித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆதலால் அவர்களுக்கு குடி தண்ணீர் வசதி செய்துக்கொடுக்க வேண்டுமென்று இந்த அரை மணி நேர விவாதம் ஏற்பட்டது. மனிதனுடைய உயிர் வாழ்வதற்கே மிக மிக அத்தியாவசியமானது தண்ணீர். கோயமுத்தூர் ஜில்லாவில் ஹரிஜன மக்கள் மற்ற ஜாதி இந்துக்கள் இருக்கும் இடத்திலிருந்தும்கூட அவர்கள் தண்ணீர் எடுத்துக்கொள்ளமுடியாமல் இருக்கிறார்கள். அன்னிய அரசாங்கம் இருந்த காலத்திலும்கூட நூற்றுக்கணக்கான கிணறுகள் வெட்டினார்கள். ஆனால் இன்றைய அரசாங்கம் மனிதனுக்கு அத்தியாவசியமாக இருக்கும் தண்ணீர் கிடைக்கவும் வசதி செய்யாமல் இருக்கிறார்கள்.

'' கோயமுத்தூர் ஜில்லா தொழிலாளிகள் நிறைந்த இடம். அங்கு சேரிகள் நிறைய இருக்கின்றன. 16 சேரிகளிலிருந்து மனுக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கலெக்டருக்கு இவைகளெல்லாம் அறிவிக்கப்பட்டிருந்தும், 4 கிணறுகள்தான் ரிப்பேர் செய்யப்பட்டன, ஒரே ஒரு கிணறுதான் வெட்டப்பட்டிருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். இந்த ஜில்லாவில் வெட்டப்படவேண்டிய கிணறுகள் 119 ஆக இருந்தபோதிலும்கூட ஒரே ஒரு கிணறுதான் வெட்டப்பட்டிருக்கிறது. பொதுப்படையாக தாழ்த்தப்பட்ட மக்களின் நன்மையைக் கருதி ஹரிஜன டிபார்ட்மெண்ட் மூலமாக ஒன்றும் எதிர்பார்ப்பதற்கில்லை. இன்னும் கலெக்டருக்கு மனம் வராதது இன்னொரு காரணம். கோயமுத்தூரில் வாழ் ஹரிஜன மக்களுக்கு நன்மை செய்வதற்கு வேண்டிய சௌகர்யங்கள் இருந்தாலும்கூட, அவர்களுக்கு செய்யவேண்டிய வசதிகள் இன்னும் செய்து கொடுக்கப்படவில்லை.

[Sri A. Ratnam] [21st December 1954

இதற்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தபோதிலும் ஒரே ஒரு கிணறு தான் வெட்டியிருக்கிறார்கள் என்று சொல்வது வருந்தத்தக்கதாயிருக்கிறது. ஆகையால் இந்த கோயமுத்தூர் ஜில்லாவில் சேரிகளில் வாழ் ஆதிதிராவிட மக்களின் வாழ்க்கைக்கு மிகமிக அத்தியாவசியமாக இருக்கும் குடிதண்ணீர் வசதியை உடனடியாக அரசாங்கம் செய்து கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்."

Sri P. RAMAMURTHI :—" Mr. Speaker, Sir, I am participating in this debate because all the hon. Members who took part in this debate spoke in Tamil. (Interruption.) This is an important subject, because the Hon. Minister does not know Tamil, and all the hon. Members spoke in Tamil, I also wish to participate in this debate and speak in English. This question of digging wells for providing drinking water for Harijans has become particularly important to-day. This question of providing drinking water has been a crying problem for so many years and it has become particularly acute now in the case of Harijans because they are suffering so much on account of social disabilities despite the fact that untouchability shall not be allowed under our Constitution. Despite the fact that untouchability has been made an offence under our Constitution, the social disabilities are there and these make it impossible for Harijans to get drinking water from wells which are located near places where caste Hindus live. We are talking about the Community Projects and other things as great revolutionary things done to uplift Harijans. Yet these people are suffering for want of drinking water. What is the sort of revolution that these projects have brought about in the country side? These projects have not even provided the most elementary amenity of life to these poor people, namely, drinking water. That amenity has not been provided for that section of people who are the producers of the entire wealth of our country. They are the people who toil day in and day out in fields and factories. For that section of the people who produce the whole wealth and on whose labour others live this amenity of drinking water is not provided. There is no sense of urgency in the Government in providing this need to those poor people. That is the gravamen of our charge. That the Government lack a sense of urgency is clear from the fact that yesterday in reply to questions the Hon. Minister said that sanction had been accorded for the digging of 119 wells in the Coimbatore district and renovation of 316 wells situated in Harijan quarters. Despite the fact that sanction has been accorded, the actual number of wells dug is the magnificient figure of one, and the number of wells actually renovated is four. That is the actual position. What greater proof is necessary to show that there is no sense of urgency on the part of Government regarding this matter and also on the officials on whom they depend? So long as this sense of urgency is not there, all this talk of uplifting the Harijans, all this talk of doing something for the Harijans, and all this talk of a Welfare State and all these things boil down to nothing more than just cant. Therefore, it is, Sir, that the demand is made that if the Government are

21st December 1954] [Sri P. Ramamurthi]

serious on the question, they should take up the matter immediately and see to it that all these things are finished within the course of this year. That is the main and important thing that the Opposition wants from this Government."

* THE HON. SRI A. B. SHETTY :—" Mr. Speaker, Sir, I am glad that so many hon. Members are interested in the provision of drinking water wells for Harijans. The Government are fully aware of the need and importance of making wells available in cheris for the benefit of the Harijans. As far back as 1941 Government had issued instructions to the effect that the needs of those considered as belonging to the low castes should be first considered and provision of wells should be made and that where there are caste prejudices, the wells should be provided in the quarters of these people or so near them that it would be difficult for the higher caste people to prevent them from using those wells. Collectors were also required to observe the principle that the requirements of these low caste people should be effectively provided. They were also told that wells should not be provided in places in which they are likely to be monopolized by the higher caste people.

" Sir, there is now an accelerated programme of digging of wells in rural areas for drinking water purposes. It has now been decided that no contribution should be levied in the matter of wells which are to be provided for Harijans and other poor and Backward people, whereas in other places we expect a contribution of 25 per cent from the beneficiaries. The Board of Revenue has been asked to reserve a portion of the State Funds for this particular purpose of providing drinking water wells for Harijans. Government have also under consideration a separate plan for the provision of wells in Harijan cheris. A report has been called for from the Board of Revenue in the matter. The Central Board of the Harijan Sevak Sangh has suggested that public wells should be located as far as possible near Harijan 'bustis'. The Board of Revenue will issue instructions to the Collectors in this matter.

" Sir, I understand that these works have not been executed with sufficient speed. I grant that it is quite necessary that the work done by the Harijan Welfare Department, the work done under the Community Projects, and National Extension Service Schemes should all be co-ordinated so that a comprehensive programme of rural water-supply may be taken up. It is quite necessary that all attempts should be made to expedite as much as possible the provision of wells in Harijan localities. In Coimbatore district from 1948–49 to 1954–55, 14 new wells have been provided, 35 wells have been repaired. This was done by the Harijan Welfare Department. Under the Rural Water-supply Comprehensive Scheme, 53 new wells have been provided and 215 wells have been repaired."

HON. MEMBERS :—" Is there water in those wells? "

[21st December 1954

SRI M. KALYANASUNDARAM :—" Is the Hon. Minister aware that in the case of Rural Water-supply Scheme, the Government have revised their policy and they are now demanding 50 per cent contribution from the villagers for digging a well."

* THE HON. SRI A. B. SHETTY :—" Well, Sir, only 25 per cent is expected from beneficiaries but not in respect of wells to be provided in Harijan cheris or in the localities where poor and Backward people live."

SRI P. RAMAMURTHI :—" Of the 53 wells supposed to have been dug and of the 215 supposed to have been repaired, I want to know from the Hon. Minister whether all these wells are situated in Harijan quarters and if not how many of them are situated in the Harijan quarters. Has he information on that? We are dealing with the particular situation of providing drinking water for the Harijans."

6–30 p.m. THE HON. SRI A. B. SHETTY :—" I am mentioning only about the wells provided in Harijan localities and not about other wells.

" The Government will take note of the suggestions made by hon. Members and we shall try to do our best to expedite the scheme."

MR. SPEAKER :—" We will be meeting only next year and I take this opportunity to wish all hon. Members of this House a happy New Year and a happy Pongal."

SRI M. KALYANASUNDARAM :—" We wish the same to you."

MR. SPEAKER :—" I now adjourn the House till 11 a.m. on Monday, the 7th February 1955."

The House then adjourned.